

திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதி தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் சி.பி.எம். கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர் ஆர். சச்சிதானந்த் ஆதரித்து ஆத்தூர் தொகுதி சார்பாக நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி பேசினார். அருகில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார், ம.தி.மு.க. செயலாளர் செல்வராகவன், சி.பி.எம். மாநில செயற்குழு உறுப்பினர் கே.பாலபாரதி, வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



திண்டுக்கல்பாராளுமன்றதொகுதிகழகத்தின்தலைமையிலான இந்தியாகூட்டணியின் சி. பி. எம்வேட்பாளர் ஆர். சச்சிதானந்தை ஆதரித்து ஒட்டன்சத்திரம் பகுதியில் அமைச்சர் அர. சக்கரபாணி வாக்குகள் கேட்டு தீவிர பிரச்சாரம் செய்தார்.

### திண்டுக்கல் தொகுதி சி.பி.எம். வேட்பாளர் சச்சிதானந்தத்தை

# இந்திய அளவில் பேசப்படும் வகையில் மாபெரும் வெற்றி பெறச் செய்வீர்!

## ஆத்தூர் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, மார் 25-

திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதி தேர்தலில் போட்டியிடும் சி.பி.எம். வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்தின் வெற்றி இந்திய அளவில் பேசும் அளவிற்கு மாபெரும் வெற்றிபெற செய்ய வேண்டும் என ஆத்தூர் தொகுதி சார்பாக நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சி சார்பாக போட்டியிடும் சி.பி.எம்.கட்சி வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் அவர்களை ஆதரித்து ஆத்தூர் தொகுதி தி.மு.க. சார்பாக நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டம் திண்டுக்கல் செம்பட்டி சாலையில் பஞ்சம்பட்டி பிரிவில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரும், திமுக மாநில துணைப்பொதுச்செயலாளருமான ஐ.பெரியசாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் வரவேற்று பேசினார்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவரும் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளருமான ப.க.சிவ குருசாமி, சி.பி.எம்.கட்சி மாநில செயற்குழு உறுப்பினர்கள் கே.பாலபாரதி, கனகராஜ், பாண்டி, சி.பி.எம். ஒன்றிய செயலாளர் சூசை மேரி, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் பாஸ்கரன், ஆத்தூர் ஒன்றிய தி.மு.க. பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் தி.மு.க. கூட்டணி சார்பாக போட்டியிடும் சி.பி.எம். கட்சி வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்தை அறிமுகம் செய்துவிட்டு கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதாவது:

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது தி.மு.க. சார்பாக போட்டியிட்ட வேலுச்சாமி அதிக வாக்குகள் பெற்று இந்திய அளவில் 2ம் இடம் பெற்றார். அதைவிட ஒருபடி மேலே போய் சி.பி.எம்.கட்சி சார்பாக போட்டியிடும் நமது கூட்டணி வேட்பாளர் ஆர். சச்சிதானந்தம் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற ஒவ்வொரு தி.மு.க. தொண்டனும் கடுமையாக உழைக்க வேண்டும்.

கட்சியினருக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை மறந்து நாம் அனைவரும் ஒரே இயக்கத்தின் கீழ் இருக்கிறோம் என்பதை உணர்ந்து தேர்தல் பணியாற்ற வேண்டும். நாம் கூட்டணி கட்சிசார்பாக போட்டியிடும் வேட்பாளருக்கு செய்யும் தேர்தல் களப்பணியை பார்த்து நமது வேட்பாளர் (தி.மு.க.) போட்டியிடும் தொகுதிகளில் கூட்டணி கட்சியினர் தேர்தல் பணியாற்றும் அளவிற்கு நாம் சிறப்பாக செயல்பட வேண்டும். இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற தலைவராக தமிழகத்தில் 40க்கு 40 தொகுதிகளை மாபெரும் வெற்றி பெறவைக்கக்கூடிய தலைவராக உள்ள நமது முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள்திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அருமை சகோதரர் சச்சிதானந்தம் அவர்களை நம்மிடம் ஒப்படைத்துள்ளார்கள் கூட்டணி கட்சி சார்பாக போட்டியிடும்அவரை இந்திய அளவில் பேச வைக்க கூடிய அளவிற்கு மாபெரும் வெற்றியை பெற்று தர வேண்டும்.

நமது கழகத்தில் சாதாரண அடிமட்ட தொண்டனை, கட்சி நிர்வாகியை உயர் பதவி பெருமளவிற்கு கைப்பிடித்து உயர்த்தி உள்ளேன் தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு நமது மாவட்டத்தில் ஒவ்வொரு தி.மு.க. தொண்டனையும் உயர்த்தி உள்ளேன்:

கலைஞர் வளர்த்த இந்த இயக்கத்தில் பலர் கட்சி பொறுப்புக்கு வரலாம் அமைச்சர் பதவிக்கு வரலாம்: அவர்களிடம் இல்லாத வரலாறு ஒன்று உள்ளது அது என்னுடைய சுயசரிதை எழுதினால்தான் கட்சியை வளர்ப்பது குறித்து தெரியும் சுயசரிதை எழுதும் அளவிற்கு நான் பெரிய ஆள் இல்லாவிட்டாலும் எனக்கு பின்னால் வரக்கூடிய கட்சி நிர்வாகிகள் தெரிந்து கொண்டால் ஒரு மாவட்டத்தில் அடிமட்ட தொண்டன் முதற்கொண்டு மேல்மட்ட நிர்வாகிகள் வரை எப்படி நடத்த வேண்டும் எப்படி கட்சி வளர்க்க வேண்டும் என்று தெரிந்து கொள்வார்கள்.

இப்போது இந்தியாவில் நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் 40க்கு 40 தொகுதிகளையும் கைப்பற்றி மாபெரும் வெற்றியை இந்திய கூட்டணி பெறும் அதற்கு நமது திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பாடுகள் உறுதுணையாக இருக்கும், இதுவரை நாம் தேர்தல் களத்தில் செய்யாத பணியை இப்போது நீங்கள் செய்ய வேண்டும் நீங்கள் ஒவ்வொரு வீடாக சென்று பொதுமக்களைச் சந்தித்து கூட்டணி கட்சியான அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னதுக்கு ஓட்டு சேகரிக்கும் போது நோட் புக்கில் குறிப்பு எடுத்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒவ்வொரு முறையும் பொதுமக்கள் சந்திக்கும் போது திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் மக்களுக்கான நலத்திட்டங்களை தினந்தோறும் பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்ய வேண்டும் என்றார்.

நாம் கடந்த முறை முத்தமிழறிஞர் அவர்கள் முதல்வராக ஆட்சியில் இருந்த போது 24 லட்சம் பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கினோம் அதைவிட மாபெரும் சாதனையாக மகளிர் உரிமை தொகையை ஒரு கோடியே 18 லட்சம் பேருக்கு நமது முதல்வர் அவர்கள் வழங்கி இந்திய அளவில் மகத்தான சாதனையை படைத்துள்ளார்கள்.

வருகின்ற 19ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது ஆனால் உங்கள் வங்கி கணக்கில் 15 ஆம் தேதியே மகளிர் உரிமைத்தொகை பணம் வந்துவிடும், இது தான் திராவிட மாடல் ஆட்சி நாயகன் முக. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியின் மகத்தான சாதனை. இந்தியாவில் இந்திய கூட்டணி 360 க்கு மேற்பட்ட இடங்களை கைப்பற்றி மகத்தான சாதனை படைக்கப்போகிறது நாம் தேர்தல் பணியில் போட்டி வேட்பாளரே இல்லை என்று எண்ணத்தில் தேர்தல் பணியாற்ற கூடாது நீங்கள் ஒவ்வொருவரும் போட்டியிடுவது போல் நினைத்து தான் தேர்தல் களப்பணியாற்ற வேண்டும் அப்பொழுதுதான் நமக்கு மாபெரும் வெற்றி கிடைக்கும் .

2009தேர்தலில் என்.எஸ். சி. சித்தன் அவர்கள் போட்டியிட்டபோது காங்கிரஸ் திண்டுக்கல் தொகுதியில் வீக்காக இருக்கிறது என்று அரசியல் பிரமுகர்கள் பேசினார்கள் ஆனால் அவர்கள் பேச்சு மொத்த தவிடு பொடி ஆக்கும் வண்ணம் ஒட்டுமொத்த வாக்காளர்களும் சித்தன் அவர்களுக்கு வாக்களித்து மாபெரும் வெற்றி பெற செய்தார்கள்.

ஆத்தூர் தொகுதியில் 50 குடும்பங்கள் இருந்தால் கூட அப்பகுதியில் நீர்வரத்து பாதைகளில் பாலங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன குறிப்பாக குடகனாறு, மருதாநதி, மாங்கரை, ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்டிக் கொடுத்தது முத்தமிழறிஞர் கலைஞர் அரசும், திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு தான். ஆத்தூர் தொகுதி மட்டுமில்லை திண்டுக்கலுக்கும் சேர்த்து ரூ.550 கோடியில் வைகை ஆற்றில் இருந்து குடி தண்ணீர் குழாய்கள் மூலம் கொண்டு வரப்படும், இதன் மூலம் திண்டுக்கல், ஆத்தூர் தொகுதியில் குடி தண்ணீர் பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்படும்: குறிப்பாக திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் ஆத்தூர் தொகுதி அதிக வாக்குகள் பெற்றுத்தந்த தொகுதி என்று தெரியும் அளவிற்கு கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தி.மு.க. நிர்வாகிகள் ஒன்றிணைந்து தேர்தல் பணியாற்ற வேண்டும்.

கூட்டணி தர்மத்தை மதிக்க கூடிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த கழகத்தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் சி.பி.எம். கட்சி வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்தை மாபெரும் வெற்றிபெற செய்வதன் மூலம் நாம் நம் கழகத்தலைவரின் பெருமைக்கு புகழ் சேர்க்கும் வண்ணம் தேர்தல் பணியாற்ற வேண்டும். நாட்கள் குறைவாக இருக்கின்றன. கூட்டணி கட்சியின் சின்னத்தை ஒவ்வொரு இல்லம்தோறும் சென்றடையும் வண்ணம் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் அயராது உழைக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் ஐ. பெரியசாமி பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட துணைச்செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்க்கிரேட் மேரி, பிலால் உசேன், தி.மு.க. நிர்வாகி அம்பைரவி, ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் என். செல்வராகவன், அகிலஇந்திய பார்வர்டு பிளாக் கட்சி செயலாளர் பி.எஸ்.ஜெயராமன், தெற்கு மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி செயலாளர் தமிழரசன், சிபிஐ கட்சி மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மணி, சிபிஎம். கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் வசந்தாமணி, செல்வராஜ், ஆசாத், மாவட்டகுழு உறுப்பினர் சி.குணசேகரன், மாவட்ட திராவிட கழகத்தலைவர் ஆனந்த முனிராசன், ஆத்தூர் தொகுதி காங்கிரஸ் பொறுப்பாளர் வி.பால சுப்பிரமணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், துணை அமைப்பாளர்கள் ப.ராஜேஸ்பெருமாள், மாயக்கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.அஸ்வின் பிரபாகரன், துணை அமைப்பாளர்கள் குட்டி (எ) துரைப்பாண்டி, முத்துக்குமார், பேரூர் செயலாளர்கள் ஸ்ரீராமபுரம் ராஜா, கன்னிவாடி இளங்கோவன், சின்னாளபட்டி மோகன்ராஜ், அகரம் ஜெயபால், பொதுக்குழு உறுப்பினர்கள் ரூபன்டென்சிங் ராஜா, அய்யம்பாளையம் ரமேஷ், பேரூராட்சிமன்ற தலைவர்கள் கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் சகிலாராஜா, அம்மையநாயக்கனூர் செல்வராஜ், அகரம் நந்தகோபால், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, மற்றும் திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஆனந்தன், ஊராட்சிமன்ற தலைவர்கள் பிள்ளை யார்நத்தம் உலகநாதன், தொப்பம்பட்டி கருப்பையா, செட்டியபட்டி ராஜா, சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அம்பாத்துரை சேகர், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், பஞ்சம்பட்டி பாப்பாத்தி நாகராஜ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் ஏ.சிவக்குமார், துணைச்செயலாளர் ராஜேந்திரன், எம்.சிபாண்டியன், வசந்தாகென்னடி, பொருளாளர் கருப்பையா, மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வக்கம்பட்டி காணிக்கைராஜ், மற்றும் நாகவள்ளி, செல்வி காங்கேயன், பாப்பாத்தி, ஜோதி மலைச்சாமி, உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக ரெட்டியார்சத்திரம் ஒன்றிய சிபிஎம். கட்சி ஒன்றிய செயலாளர் கே.எஸ். சக்திவேல் நன்றி கூறினார்.

### 29ஆம் தேதி ஈரோட்டில் இருந்து - மக்கள் நீதி மய்யத் தலைவர்

# கலைஞானி கமலஹாசன் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார்!

## ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

சென்னை, மார்ச் 25-

‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் நீதி மய்யம்தலைவர் கலைஞானி கமலஹாசன் 29ஆம் தேதி ஈரோட்டில் இருந்து தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகளுடனான பிரச்சார வழிகாட்டுதல் ஆலோசனை கூட்டத்தில் கலைஞானி கமல் பேசியதாவது:

மோடி பிரதமர் என்பதற்காக அவருக்கு தலைவணங்குவேனே தவிர தன்மானத்தை விட்டு தலை வணங்க மாட்டேன் எனவும் “என் அரசியல் எதிரி சாதியம்தான். மாநில அரசின் உரிமைகளை ஒன்றிய அரசு பறிப்பதால்தான் திமுக கூட்டணியை ஆதரிக்கிறேன். மோடி பிரதமர் என்பதற்காக தலை வணங்குவேனே தவிர தன்மானத்தை விட்டு தலைவணங்க மாட்டேன். மக்களவைத் தேர்தலில் போட்டியிடாததற்கு நிறைய பேர் வருத்தப்பட்டார்கள், மக்களவைத் தேர்தலில் போட்டியிடாதது தியாகம் அல்ல, வியூகம். இந்த முடிவை எப்படி என்ன தைரியத்தில் எடுத்தீர்கள் என்றெல்லாம் ராஜாஜியை கேட்டது போல் என்னையும் கேட்பார்கள்



அவர் சொன்ன பதிலை தான் நானும் செல்லுவேன். நான் காந்தியின் கொள்ளு பேரன். நாம் காந்தியின் கொள்ளு பேரன்கள். எனக்கு சந்தர்ப்பவாதம் என்ற ஒரு வாதமே இல்லை. நம் வாதத்தை சந்தர்ப்பத்திற்கேற்ப பேசக்கூடாது” என கமல்ஹாசன் பேசினார்.

மக்களவை தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணியை ஆதரித்து ஈரோட்டில் இருந்து மார்ச் 29ம் தேதி கமல்ஹாசன் பிரச்சாரத்தை தொடங்குகிறார். மார்ச் 29ல் ஈரோடு, 30ல் சேலம், ஏப்.2ல் திருச்சி, 3ல் சிதம்பரம், 6ம் தேதி ஸ்ரீபெரும்புதூர், சென்னை, ஏப்.7ல் சென்னை, 10ம் தேதி மதுரை, 11ல் தூத்துக்குடி, 14ல் திருப்பூர், 15ல் கோவை, 16ல் பொள்ளாச்சியில் கமல்ஹாசன் பிரச்சாரத்தை தொடங்க என்பது குறிப்பிடத்தக்கது.

# அரவிந்த் கெஜ்ரிவால் கைதை கண்டித்து மாபெரும் பேரணி!

## ‘இந்தியா’ கூட்டணி அதிரடி அறிவிப்பு

டெல்லி, மார்ச் 25-

டெல்லி அரசின் மதுபான கொள்கையில் முறைகேடு நடைபெற்றதாக அம்மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது அமலாக்கத்துறை பணமோசடி உள்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் விசாரணைக்கு ஆஜராகும்படி 8 முறை சம்மன் அனுப்பியும் கெஜ்ரிவால் ஆஜராகவில்லை.

அதேவேளை இந்த சம்மனை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் கெஜ்ரிவால் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு கடந்த 20ம் தேதி விசாரணைக்கு வந்தபோது கெஜ்ரிவால் மீதான சட்ட நடவடிக்கைக்கு எந்த தடையும் விதிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இதனிடையே, மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறை 21ம் தேதி இரவு கைது செய்தது. கைது செய்யப்பட்ட கெஜ்ரிவால் டெல்லி ரோஸ் அவென்யூ கோர்ட்டில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தப்பட்டார்.

அப்போது, கெஜ்ரிவாலை 6 நாட்கள் (28ம் தேதி வரை) அமலாக்கத் துறை காவலில் எடுத்து விசாரிக்க கோர்ட்டு அனுமதி வழங்கியது. இதையடுத்து, கெஜ்ரிவால் அமலாக்கத்துறை காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்ட சம்பவம் அரசியல் வட்டாரத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில், மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டதை கண்டித்து இந்தியா கூட்டணி சார்பில் மாலை பேரணி நடத்தப்பட உள்ளது. காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகள் வரும் ஞாயிற்றுகிழமை (மார்ச் 31) டெல்லி ராம்லீலா மைதானத்தில் மெகா பேரணி நடைபெற உள்ளது.

இந்த பேரணியில் இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ், தி.மு.க. ஆம் ஆத்மி, உள்பட பல்வேறு கட்சிகள் பங்கேற்கும் என தகவல் வெளியாகியுள்ளது. மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு விசாரணை அமைப்புகளை ஏவி எதிர்க்கட்சிகளை எடுக்க நினைப்பதாக இந்தியா கூட்டணி குற்றஞ்சாட்டியுள்ளது.

# அம்பத்தூரில் தீவிர வாக்கு சேகரிப்பு!

சென்னை, மார்ச் 25-

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பின்படி, வருகின்ற நாடாளுமன்ற மக்களவை தேர்தலை முன்னிட்டு, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்குப் பகுதி செயலாளர்), 7வது மண்டலக் குழுத் தலைவர் பி. கே.மூர்த்தி எம்.சி, தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ் பி.இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர்) ஆகியோரின் முன்னிலையில் 89வது வட்டக் செயளாலரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் நேற்று முன்தினம் (23.03. 2024) மாலை 5.00 மணிக்கு வட்ட வடிவ நகரில் உள்ள கட்சி அலுவலகத்திலிருந்து தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது. அனைத்து கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், 89வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA 2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள், வட்ட இளைஞரணி, மகளிர் அணி, மாணவர் அணியினர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர்.



வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் இந்தியா கூட்டணி கட்சியின் சார்பில், போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கே.என்.அருண் நேரு புத்தனம்பட்டி கோட்டூர், அபிநமங்கலம், பகலவாடி காளிப்பட்டி, அம்மாபட்டி உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அவருடன் வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன் எம்.எல்.ஏ., ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ., தர்மன், ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன், அண்ணாதுரை, ஸ்ரீதர், மயில்வாகனன், காட்டுக்குளம் கணேசன், ஆப்பிள் கணேசன் மற்றும் கூட்டணிக் கட்சித் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.